# திருவருட்பயனில் முப்பொருள் உண்மைகள்

**ஏ.கலைவாணி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி
வந்தவாசி

**முன்னுரை**

'சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஓப்பார் இங்கு யாவரும் இல்லை"

(திருமாந்திரம், பாயிரம் — 4)

என்னும் தன்னிகரற்ற சிறப்பைப் பெற்று சைவ சமயத்தின் தலைமை தெய்வமாகப் போற்றப்படுபவர் சிவபெருமான். பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தின் புகழைப் பாடி பரவி நிற்கின்றன. இவை தோத்திர நூல்கள் எனப்படுகின்றன. பன்னிரு திருமுறைகள் காலத்திற்குப்பின் சைவ சமயக் கருத்துக்களை மெய்கண்ட சாத்திரம் ஆழமாக வெளிப்படுத்துகின்றது. இவை சாத்திர நூல்கள் எனப்படுகின்றன. பதினான்கு நூல்களின் தொகுப்பாக விளங்கும் மெய்கண்ட சாத்திரத்தில் திருவருட்பா என்னும் நூலும் ஒன்றாகும். சிதம்பரத்தில் தோன்றிய உமாபதி சிவாச்சாரியாரால் எழுதப்பட்ட இந்நூலில் சைவ சித்தாந்த முப்பொருள் உண்மைகள் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இறைவன் முதன்மையானவன்**

மயக்கம் தரும் உலக வாழ்வில் அனைவரும் பொய்ம்மையை மெய்ம்மை என்று நினைக்கும் நிலை உருவாக்கியுள்ளது. நிலைத்தபொருளை விடுத்து நிலையில்லாதவற்றையே மக்கள் முதன்மையாக எண்ணிக் கொண்டாடுகின்றனர். மக்களின் மயக்கம் நீங்க முதன்மையானது எது என்று வழிகாட்டுகிறது திருவருட்பயன்.

"அகர உயிர்போல அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கம் நிறைந்து" (திருவருட்பயன் –1)

என்று உமாபதியார் கூறுவதிலிருந்து எழுத்துக்களில் முதன்மையானது 'அகரம்' என்பது போல் உலகிற்கு முதன்மையானவன் 'இறைவன்' என்பதை அறியலாம். அகரம் இல்லையாயின் ஏனைய எழுத்துகள் இல்லை. அதுபோல இறைவன் இல்லையாயின்

வேறெந்தப் பொருளும் இல்லை என்று உறுதிபடுத்துகிறது திருவருட்பயன் வள்ளுவரும்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (குறள் – 1)

என்று கூறுவதில் இருந்து இறைவனே உலகில் முதன்மையானவன் என்பதை உணரலாம்.

**உயிரின் நிலை**

உயிர் என்றச் சொல்லை சைவ சித்தாந்தம் 'பசு' என்றும், 'ஆன்மா' என்றும் சுட்டுகிறது. சைவ சித்தாந்தம் உயிர் என்றும் உள்ளது என்றும் அது எண்ணிக்கையில் அடங்காதவை என்றும் விளங்குகிறது. உயிர்கள் தங்கள் மலங்களின் தன்மைக்கு தக்கவாறு விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகையாக வகைப்படுத்தப்படுகின்றனர், பசுக்கள் உணர்த்த உணரும் அறிவுடையாக உள்ளன. இறைவன் உணர்த்த உணரும் அறிவைப் பெற்றுள்ள உயிர் கருவி. கரணங்களோடு கூடும் ஐந்து நிலைகள் உள்ளன. அந்நிலைகள் 'அவத்தை' எனப்படும். அவை, நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கள் என்பவை. ஐந்தவத்தை நிலையை,

"கண்டவற்றை நானும் கனவிற் கலங்கிடுந்
திண்டிறலுக்கு என்னோ செயல்" (திருவருட்பயன் — 14)

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன. நனவு நிலை என்னும் விழிப்பு நிலையில் கண்ட காட்சிகளை நாள்தோறும் கனவிலே மறந்தும், பிறழ்ந்தும் காண்கின்ற குறைந்த திறன் உடையவையாக உயிர்கள் உள்ளன. எனவே உயிர்கள் அதை உணர்ந்து தெளிதல் வேண்டும் ஐவகை அவத்தையில் ஈடுபடும் கருவிகள் உரிய இடங்களில் மேவுவதைக்கண்டு, உயிர் பெறும் அவத்தையும் அறிவினால் அறிந்துகொள்ள வேண்டும் என்கிறது சிவப்பிரகாசம். இக்கருத்து

"பொய்வகைப் பவம் அகற்றப்
புரிந்திடில் அருளால் ஆங்குஏக
ஐவகை அவத்தை உய்க்கும்அறி
வினால்அறிந்து கொள்ளே" (சிவப்பிரகாசம்–61)

என்ற தொடர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்து அவத்தைகளும் காரிய அவத்தைகள் எனப்படும். காரண அவத்தை கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று நிலையில் நிகழ்கின்றது.

**இருள்மலம்**

மலம் என்னும் சொல் 'பாசம்' என்றும் 'தளை' என்றும் குறிக்கப்படும். உயிர்கள் இறைவனை உணரவொட்டாமல் அவற்றைக் கட்டியுள்ள பொருட்கள் தடை செய்கின்றன. சைவ சித்தாந்தம் மும்மலங்களை உறுதிப்படுத்திக் கூறினாலும் அவற்றில் முதன்மையானதும் எப்பொழுதும் உயிரைப் பற்றியிருப்பதும் ஆவணமலமே என்றுரைக்கிறது. ஆணவமலம் உயிரைப் பற்றிருக்கும் வரையில் இறையருளை உணர

இயலாது. "ஆணவம் என்றச் சொல்லிற்கு அணுத்தன்மையைச் செய்வது என்பது பொருளாகும். இயற்கையில் விரிவுடையதாகிய உயிரின் அறிவை மிகச் சுருங்கியதாகச் செய்வது ஆணவமலம்" என்பார் சி.அருண வடிவேல் முதலியார். ஆணவமலத்தை உமாபதியார்,

"இருளானது அன்றி இலதுஎவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்" (திருவருட்பயன்–22)

என்றபாடலில் எடுத்துரைக்கிறார். இருளானது, எல்லாப் பொருட்களின் தன்மையும் மறைத்து இருட்டாகவும், அப்பொருட்கள் இல்லாத மாதிரியும் காட்டுவது போல், ஆணவமும் ஆன்மாவின் தன்மையை மறைத்து இருள் மயமாய் நிற்கும்.

"ஆணவம் அறிவையே மறைப்பதால் அது இருப்பதை அறிய முடியாது. மாயை கன்மங்கள் உயிரின் அறிவை விளக்கும் பொருட்கள். எனவே அறியாமையைச் செய்வது ஆணவமே" என்பார் சுடலி தியாகராசன்.

உமாபதியார் ஆவணத்தை இருளை விடவும் கொடியதாக விளக்குகிறார். ஏனெனில் இருளானது பிற பொருட்களைக் காட்டாதாயினும் தன்னுடைய உருவத்தையேனும் காட்டும். ஆணவமோ பிறப்பொருட்களையும் காட்டாது. தன்னையும் காட்டாது என்கிறார். இதனை,

"ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது" (திருவருட்பயன்–23)

என்றப் பாடலில் உணர்த்துகிறார். எனவே கன்மம். மாயை ஆகியவை மலங்களில் ஒரு கூறாகத் திகழ்ந்தாலும் அவை உயிரறிவை மறைப்பதில்லை. ஆனால் ஆணவம் உயிரறிவை மறைக்கும் காரணத்தால் இறையருள் கிட்டுவதில்லை. இதனை உணர்ந்து தெளிதல் வேண்டும்.

**முடிவுரை**

உயிர்கள் பிறவியெடுத்ததன் நோக்கம் பிறவாமையை அடைந்து கருணைக்கடலின் பேரின்பத்தில் கலந்து ஈடேறுவதற்கே. இந்நிலை அடைய இறையருளைப் பற்றிய தெளிவும், உயிர்களின் உண்மை நிலை பற்றிய அறிவும், துன்பம் தரும் மலங்கள் குறித்தும் அறிதல் இன்றியமையாதது. அவற்றை அறிந்தால் மக்கள் உலகப்பற்றுகளை விடுத்து மேன்மை அடையலாம் என்று வழிகாட்டுகிறது திருவருட்பயன்.

**பயன்படுத்திய நூல்கள்**

1. திருமந்திரம்
2. மெய்கண்ட சாத்திரம்
3. பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்
4. திருக்குறள்
5. முப்பொருள் இயல்பு